**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்</u>**

முன்னிலை : திருமதி.A.சரண்யா, M.A., L.L.M., M.Phil.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
குமாரபாளையம்.

2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05–ம் நாள் வியாழன்கிழமை

**<u>இ.ம.எண்.4/2024 இன் அ.வ.எண்.7/2020</u>**

சுபத்ராதேவி அவரது சிறப்பு அதிகார முகவர்
D.C.வெங்கடேஸ்வரன் ...மனுதாரர்/ 2–ம் பிரதிவாதி

/எதிராக/

1. ராமாயி
2. தனபால் ...எதிர்மனுதாரர்கள்/ வாதி/1–ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பு 04.09.2024–ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சிவசுப்ரமணியன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S.லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதியை பொறுத்து தோன்றா தரப்பினராகவும் உள்ளார். மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1(A) (3) –ன் கீழ் தாக்கல்.

**1. மனுதாரர்/ 2–ம் பிரதிவாதி தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:**

மனுதாரர்/2–ம் பிரதிவாதி இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1(A) (3)–ன் கீழ் தாக்கல் செய்து, மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை இந்த அசல் வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளார். மேலும் மனுதாரர்/2–ம் பிரதிவாதி, மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்/2–ம் பிரதிவாதி தொலைத்துவிட்டார். மனுதாரரின் சிறப்பு அதிகார் முகவரால் தற்போது தான் கிடைக்கப்பெற்றது அதனால் மேற்படி ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை. மேலும், மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர்/2–ம் பிரதிவாதியின் வழக்கை நிரூபிக்க மிகவும் அவசியமானது ஆகும். எனவே, மனுதாரர்/2–ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த போது, மேற்படி ஆவணங்கள், மனுதாரர்களின் வசம் இல்லையென்பதாலும், மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்குமாறும் கோரி, இந்த மனுவை அனுமதித்து, மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை இந்த அசல் வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளார்.

2. **எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து, எதிர்மனுதாரர்/வாதி தனது பதிலுரையை தாக்கல் செய்துள்ளார். அதில், மனுதாரர்/2–ம் பிரதிவாதி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் எதிர்வழக்குரையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் வாதி தரப்பு சாட்சிகளை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதே மனுவில் குறிப்பிட்டுள்ள

ஆவணங்கள் மனுதாரர்/2-ம் பிரதிவாதி வசம் இருந்திருக்க வேண்டும். மனுதாரர்/2-ம் பிரதிவாதி வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரரின் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளார்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

5.1) வழக்கு கோப்புகளை, இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. எதிர்மனுதாரர்/வாதி இந்த அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு தற்போது 2-ம் பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/ 2-ம் பிரதிவாதி இந்த இடைநிலை மனுவை தாக்கல் செய்து, மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் குறியீடு செய்ய அனுமதி கோரி இந்த மனுவை அனுமதிக்க வேண்டியுள்ளார். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணவேண்டிய ஒன்றாகும்.

5.2) மனுதாரர் தரப்பில் மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தின் தொடர்புடைமை குறித்து வழக்கு இறுதியில் தான் முடிவு செய்ய முடியும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு இழப்பு ஏற்படும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்த

அநீதியும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரர் தரப்பில் மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, மனுதாரர்/2–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

i) இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

ii) செலவு தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 05–ம் நாள் செப்டம்பர் மாதம் 2024–ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

True copy

Sd/-A.Saranya,
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

**மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

**எதிர்மனுதாரர்/வாதி/1–ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

True copy

Sd/-A.Saranya,
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

உத்தரவு,
இ.ம.எண்.4/2024 இன்,
அ.வ.எண்.7/2020,
நாள்: 05.09.2024.